நவமணிமாலை

ஸ்ரீ:
ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த ஸ்ரீ தேசிக ப்ரபந்தம்

சீரொன்று தூப்புல் திரு வேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

நவமணிமாலை

1:##
ஒருமதி அன்பர் உளங்கவர்ந்தன*
உலகம் அடங்க வளர்ந்தளந்தன*
ஒருசடை ஒன்றிய கங்கைதந்தன*
உரகபடங்கள் அரங்கு கொண்டன*
தருமமுயர்ந்தது இதென்ன நின்றன*
தருமனிரந்தது இசைந்து சென்றன*
சகடமுடைந்து கலங்க வென்றன*
தமர்கள் அருந்து மருந்து இதென்பன* (முதல் கோஷ்டி)
திருமகள் செய்ய கரங்கள் ஒன்றின*
திகழ் துளவுந்து மணங்கமழ்ந்தன*
செழுமணி கொண்ட சிலம்பிலங்கின*
சிலைதனில் அன்றோர் அணங்கு உமிழ்ந்தன*
அருமறை அந்தம் அமர்ந்த பண்பின*
அயன்முடி தன்னில் அமர்ந்து உயர்ந்தன*
அருள்தர எண்ணி அயிந்தை வந்தன*
அடியவர் மெய்யர் மலர்ப்பதங்களே.

2:
மகரம் வளருமளவில், பௌவமடைய உற்றலைத்தனை*
வடிவுக மடமென அமர்ந்து, கிரிதனைத் தரித்தனை*
மலியுமசுரன் உரமிடந்து, வசுதையைப் பெயர்த்தெடுத்தனை*
வலிகொள் அவுணன் உடல் பிளந்து, மதலை மெய்க்குதித்தனை*
பகருமுலகம் அடியளந்து, தமர்க்களுக்கு அளித்தனை*
பரசுமுனிவன் வடிவுகொண்டு, பகைவரைத் துணித்தனை*
பணியவிசைவில் தசமுகன் தன், முடிகள் பத்து உதிர்த்தனை*
படியுமுருவில் வருபிலம்ப, அசுரனைத் தகர்த்தனை* (முதல் கோஷ்டி)
நகரிதுவரை எனவுகந்து, வரை கரத்தெடுத்தனை*
நடமொடியல் உபரியில் வந்து, நலிவறுக்க உற்றனை*
நலியும் வினைகள் செகுமருந்தின், நலமுறைந்த வெற்பினை*
நணுகு கருடநதி கிளர்ந்த, புனல் உகப்பில் வைத்தனை*
அகரமுதல உரைகொள், மங்கை கணவனுக்களித்தனை*
அடையும் வினதை சிறுவனுய்ய, அருள்கொடுத்து உயர்த்தினை*
அடியும் அணையுமெனும் அனந்தன், அடி தொழக் களித்தனை*
அவனிமருவு திருவயிந்தை, அடியவர்க்கு மெய்யனே.

3:
புரமுயர்த்த அசுரர்கட்குஓர்* புறமுரைத்த பொய்யினான்*
வரையெடுத்து மழைதடுத்த* மழையொடொத்த மெய்யினான்*
திரைநிரைத்த கடலெரித்த* சிலைவளைத்த கையினான்*
அருள்கொடுத்து வினைதவிர்க்கும்* அடியவர்க்கு மெய்யனே.

4:
தேசு ஒத்தார் இல்லையெனும்* தெய்வநாயகனார்*
வாசக்குழல் மாமலராள்* மணவாளனார்*
வாசித்தெழு மன்மதனார்* மணல் தோப்பில்*
மாசிக்கடலாடி* மகிழ்ந்து வருவாரே.

5:
உருளும் சகடம் ஒன்றுதைத்தாய்*
உலகமேழும் உண்டுமிழ்ந்து அளந்தாய்*
பொருளும் அழலும் இறையாகப்-
பூண்டேன்* அடிமையினின் மீண்டேன்*
இருளும் அருளும் தரும் அந்நாள்*
எழிலார் ஆழி சங்கேந்தி*
அருளும் தெருளும் தர என்பால்*
அடியோர் மெய்ய வந்தருளே.

6:
வஞ்சனை செய் பூதனையை மலியுஞ்சாட்டை*
மல்லரையோர் மதகளிற்றை வானோரஞ்சும்*
கஞ்சனை முன்கடிந்து அவனி பாரந்தீர்த்த
காவலனே கோவலனாய் நின்றகோவே*
அஞ்சனமும் காயாவும் அனையமேனி*
அடியவர்க்கு மெய்யனே அயிந்தைவாழும்*
மஞ்செனவே அருள்பொழியும் வள்ளலே* நின்-
வடிவழகு மறவாதார் பிறவாதாரே.

7:
மையுமாகடலும் மயிலும் மாமழையும்*
மணிகளும் குவளையுங்கொண்ட-
மெய்யனே* அடியோர் மெய்யனே விண்ணோர்-
ஈசனே* நீசனேன் அடைந்தேன்*
கையும் ஆழியுமாய்க் களிறு காத்தவனே*
காலனார் தமர் எனைக் கவராது*
ஐயனே வந்து அன்று அஞ்சல் என்றருள்* தென்-
அயிந்தை மானகர் அமர்ந்தானே.

8:##
மஞ்சுலாவு சோலை சூழ், அயிந்தை மன்னுசீர்*
வரையெடுத்து, நிரையளித்த, மாசில் வாசுதேவனே*
செஞ்சொலன்பர், சிந்தை கொண்டு, தீதிலாத தூதனாய்த்*
தேருமூர்ந்து, தேசுயர்ந்த, செல்வ தெய்வ நாயக*

வெஞ்சொலாளர், காலதூதர், வீசு பாசம் வந்தென்மேல்*
விழுந்தழுந்தி, யானயர்ந்து, வீழ்வதற்கு முன்ன நீ*
அஞ்சல் அஞ்சல், அஞ்சல் என்று, அளிக்க வேண்டும் அச்சுதா*
அடியவர்க்கும், அருளியக்கும், அடியவர்க்கு மெய்யனே. **

9:
பொருத்தம் பொருந்தலும்* போகுந்தவற்றுடன் பொய்ம்மதிமேல்*
விருத்தம் கலித்துறை* மேவுமழன்மதம் வேறினியென்*
திருத்தமனத்தினில்* சேராவெமைத் தெய்வநாயக,* நின்–
வருத்தம் பொறாவருளால்* மன்னடைக்கலம் கொண்டருளே. **

10:##
அந்தமில்சீர் அயிந்தை நகர் அமர்ந்த நாதன்*
அடியிணைமேல் அடியுரையால் ஐம்பதேத்திச்*
சிந்தைகவர் பிராகிருதம் நூறு கூறிச்*
செழுந்தமிழ் மும்மணிக்கோவை செறியச் சேர்த்துப்*
பந்து கழல் அம்மானை ஊசல் ஏசல்*
பரவு நவமணிமாலை இவையும் சொன்னேன்*
முந்தைமறை மொழிய வழி மொழி நீயென்று*
முகுந்தனருள் தந்த பயன் பெற்றேன் நானே. **

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்